
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1172

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

156

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த குடவாசல் சி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

## குடவாசல் சி.கிருஷ்ணமூர்த்தி : அதிகாரம் துறந்து அரசியலுக்கு...

*1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார் பேரறிஞர் அண்ணா. வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கையில், அண்ணா வெற்றி பெறமாட்டார் என்ற நிலைமை வாக்குகள் எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதே தெரிந்துவிட்டது. அந்த நிலையில் வாக்குகள் எண்ணும் இடத்திலிருந்து வெளியேறி, அண்ணாவின் வீட்டிற்கு வந்து துக்கம் தொண்டையை அடைக்க, பேசக்கூட முடியாமல் தட்டுத் தடுமாறுகிறார் அண்ணாவின் தேர்தல் ஏஜென்டாக இருந்த தம்பி. "அண்ணா நமக்கு வெற்றி இல்லை" என்று அவர் கூறியபோது அண்ணா, முகத்தில் எவ்வித மாறுதலும் காட்டாமல் சிரித்தபடியே, "கவலைப்படாதே கிருஷ்ணமூர்த்தி, இது எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறி" என அவருக்கு ஆறுதல் சொல்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று அண்ணா அடிக்கடி சொல்வதை, அப்பொழுது நேரில் அறிந்துகொண்ட அந்தத் தம்பிதான் கிருஷ்ணமூர்த்தி. இன்றைய திருவாரூர் மாவட்டம், குடவாசலைச் சேர்ந்த மூத்த முன்னோடி. முத்தமிழறிஞர் கலைஞரின் நண்பர். வாழ்ந்த வரை பகுதிக் கழகத்தினர் அழைத்த சுருக்கமான பெயர் 'சி.கே'.*

*அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், இன்றைய மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 1915-ஆம் ஆண்டு ஜூலை 6-இல் பிறந்தவர். பெற்றோர் சிதம்பரம் - பட்டம்மாள். ஓரளவு பொருளாதார செல்வாக்குக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். கிருஷ்ணமூர்த்தியின் மூத்த சகோதரர் குடவாசலில் வசித்ததால், இவரும் கல்வி கற்பதற்காக குடவாசல் வந்து, அந்த ஊரையே சொந்த ஊராக்கிக் கொண்டார். குடவாசலில் உயர்நிலைக் கல்வியிலும், கடலூர் சூசையப்பர் கல்லூரியில் பட்டப்படிப்பும் படித்தவர்.*

*பள்ளியில் படிக்கும் காலத்திலேயே, தேசபக்தியும், பொதுநலத்தொண்டும் இவரை பெரிதும் கவர்ந்தன. 1931 - 32 ஆண்டுகளில் கல்லூரியில் படிக்கும் காலத்தில் சுதந்திரப் போராட்ட ஊர்வலங்களில் முன்னிலையில் நின்றுள்ளார். தொடர்ச்சியாக நீதிக்கட்சி அரசியல் பக்கம் ஈர்க்கப்பட்ட அவரை, குடும்பத்தினர் திருச்சி லால்குடியில் ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்து விடுகின்றனர். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றிய அதே வேளையில், தனது திருமணத்தை சுயமரியாதைத் திருமணமாக நடத்துவதில் உறுதியாக இருந்து வெற்றிபெற்றார். 1935-ஆம் ஆண்டில், சுயமரியாதைத் திருமணம் புரிந்து கொண்டவர்.*

*இலால்குடியில் வேலையில் இருந்து விலகி, சென்னையில் ஒரு ஆடிட்டிங் நிறுவனத்திலும், பின்னர் இந்து அறநிலையத்துறையில் திருக்கோயில் நிர்வாக அதிகாரியாகவும் வேலைக்குச் சேர்ந்தார். அதன்பின்னர், மதர் இந்தியா என்கிற காப்பீடு நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தார். இதே காலகட்டத்தில் திராவிட இயக்கத்துடன் கிடைத்த தொடர்பு, அவரை சமூகப் பணிகளின் பக்கம் கவனத்தைத் திசைதிருப்ப வைத்தது. காப்பீடு நிறுவனப் பணிகளுக்காக இவர் கும்பகோணத்தில் தொடங்கிய அலுவலகம், கே.கே.நீலமேகம் போன்ற திராவிடர் கழக முன்னோடிகள் வந்து செல்லும் மையமாகச் செயல்படத் தொடங்கியது.*

*1946-ஆம் ஆண்டு முதல் தீவிரமாக அரசியலில் இறங்கி, மக்கள் பணியில் கலந்து கொள்ளத் துவங்கினார். அதே ஆண்டில் திராவிடர் கழகம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆறு வாரங்கள் சிறைதண்டனை பெற்றுள்ளார். பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய நட்பு வட்டத்தில் இருந்தவர். அன்றைய தஞ்சை மாவட்டத்தில், கார் வைத்திருந்த சிலரில் சி.கே.வும் ஒருவர் என்பதால், பேரறிஞர் அண்ணா எப்போது தஞ்சை மாவட்டம் வந்தாலும், சி.கே. அவர்களின் காரில்தான் பயணிப்பார்.*

*1949-இல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வெளியேறிய அண்ணாவுடன் வெளிவந்த பிரமுகர்களில் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர். கழகம் தொடங்கப்பட்டபோது கழகப் பொதுக்குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். 1951-இல், தஞ்சை மாவட்டக் கழகத்தின் முதல் மாநாடு மயிலாடுதுறையில் நடைபெற்றபோது, மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.நீலமேகம் அவர்களோடு இணைந்து மாநாட்டுப் பொறுப்பிலும் பங்கேற்றார். அண்ணா உள்ளிட்ட தலைவர்களை அழைத்துவரும் பொறுப்பை ஏற்றிருந்தவர்.*




*'அண்ணாவுடன் இவர் அளவளாவிப் பேசி, வாய்விட்டு சிரிக்கும் காட்சியானது காண்பவர் மனதை பெரிதும் கவருவதாக இருக்கும். இவர்களது நட்பு மிகவும் நெருக்க மானது' என* ***'அண்ணா சில நினைவுகள்'*** *நூலில் பதிவு செய்துள்ளார் கவிஞர் கருணானந்தம்.*

### அரசுப் பணியைத் துறந்து

*காப்பீடு நிறுவனங்களில் அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டே, கழக அரசியலிலும் கவனம் செலுத்திய சி.கே. அவர்களை முழு நேரமாக 1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது ஈடுபட வைத்தார் அண்ணா.*

*எல்.ஐ.சி.யின் தென்மண்டல வளர்ச்சி அதிகாரிகளின் தலைவராக இவர் பொறுப்பில் இருந்த நேரம், எல்.ஐ.சி. பொதுத்துறை நிறுவனமாக உருவாகி இருந்த நிலையில், 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மயிலாடுதுறை தொகுதியில் கழகத்தின் சார்பில் வேட்புமனு தாக்கல் செய்தார். அரசுப் பணியில் உள்ளவர் தேர்தலில் நிற்பதற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதால், பணியில் இருந்து விலகி, முழுநேர அரசியலில் ஈடுபடலானார்.*

*அப்போது வெற்றிபெறவில்லை என்றாலும், 1961-இல் குடவாசல் பஞ்சாயத்து யூனியன் தொடங்கப்பட்டபோது, அதன் துணைத் தலைவராக இருந்து ஏராளமான பணிகளைச் செய்தார். ஜில்லா போர்டு தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் சி.கே.அவர்களை நிற்கச் சொல்வார் பேரறிஞர் அண்ணா. 1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கும்பகோணம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். 1967-இல் குடவாசல் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நிறைவேற்றினார்.*

### முற்றுப்புள்ளியே தேவை

*"1960-ஆம் ஆண்டில் ஈ.வெ.கி.சம்பத் கழகத்தை விட்டு வெளியேறும் நெருக்கடி அளித்தபோது, வேலூர் பொதுக்குழுவில், "அண்ணா இப்பிரச்சினைக்கு இனித் தொடர்ச்சி என்பது வேண்டாம், முற்றுப்புள்ளிதான் தேவை" என்று சி.கே. ஆங்கிலத்தில் அழுத்த மாகக் கூறினார். பொதுக்குழு உறுப்பினர்கள் அவர் கருத்தை ஆதரிக்க, சம்பத் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. "தொடர்ச்சி வேண்டாம். முற்றுப்புள்ளியே தேவை" என்ற சொற்றொடரை அண்ணா அடிக்கடி நினைவு படுத்துவது உண்டு. நீண்டுகொண்டே போன சம்பத் பிரச்சினைக்கு முடிவு காணக் கோரியவர் தான் குடவாசல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி.கிருஷ்ணமூர்த்தி என அவரது கழக உறுதியைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.*

*பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கொண்டிருந்த தோழமை போலவே, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர். 1971 ஆட்சிக்காலத்தில், பல முக்கிய பொறுப்புகளை கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் அளித்தார் கலைஞர். மாநில கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவர், திருக்கோயில்கள் மாநில ஆலோசனைக்குழு உறுப்பினர், தமிழ்நாடு விவசாயக் கல்லூரி மாணவர் சேர்க்கும் குழுத் தலைவர் என ஏராளமான பொறுப்புகளை அளித்தார். விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிக் கண்டறிய, வெளிநாடுகள் சென்ற குழுவில் அங்கம் வகித்தார். அத்தனை பொறுப்புகளிலும் திறம்பட நிர்வகித்து பெயர் பெற்றவர்.*

*1970-ஆம் ஆண்டில் சென்னைக்குக் குடிபெயர்ந்தாலும் குடவாசல் பேருந்து நிலையம், கொரடாச்சேரி பேருந்து நிலையம் ஆகியவற்றை அமைக்கப் பாடுபட்டார். கும்பகோணத்தில் கூட்டுறவு மெட்டல் ஒர்க்ஸ் நிறுவனத்தைச் சீரமைப்பதில் பங்கு வகித்தார். கழகத்தினர் அனைவரோடும் அன்போடு பழகிய சி.கே. மிசா காலத்தில் அவர் ஏற்றிருந்த அனைத்து நிர்வாகப் பொறுப்புகளையும் ஒப்படைத்த பண்பாளராக இருந்தார். அதற்குப் பின்னர் தீவிர அரசியல் செயல்பாடுகளைக் குறைத்துக் கொண்டவர், உடல்நலம் குன்றி, 1989-ஆம் ஆண்டு 74-வது வயதில் இயற்கை எய்தினார். சி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், பேரறிஞர் அண்ணாவிடம் கொண்டிருந்த நட்பும், கலைஞரிடம் கொண்டிருந்த அன்பும் காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கும்.*

> **"சி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், பேரறிஞர் அண்ணாவிடம் கொண்டிருந்த நட்பும், கலைஞரிடம் கொண்டிருந்த அன்பும் காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கும்."**

...துடிக்கும்

## நிர்மலா சீதாராமன் பேசிய ஆணவப்பேச்சு!

'நெல் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கக்கூடாது என மாநில அரசுகளை அறிவுறுத்துகிறது ஒன்றிய அரசு' என முதலமைச்சர் கூறியவுடன், "தவறான செய்தியைப் பரப்புகிறார்" என மறுத்தார் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். ஆனால், ஒன்றிய அரசு அனுப்பிய சுற்றறிக்கை ஊடகங்களில் வெளியாகி, நிர்மலா சீதாராமனின் புரட்டு உடனுக்குடன் அம்பலமானது.

இதுதொடர்பாக, பதிவிட்டுள்ள கழகக் கல்வியாளர் அணியின் தலைவர் செந்தலை ந.கவுதமன்.

'அதே கடிதத்தில் தெளிவாக இன்னொன்றையும் குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் : "நீங்கள் ஊக்கத்தொகையையும் சலுகைகளையும் அள்ளித் தருவதால், விளைச்சல் பெருகியுள்ளது; தானியக் கிடங்குகள் நிரம்பி வழிகின்றன." ஒன்றிய அரசே வெளிப்படையாக இப்படி ஒப்புக்கொள்வது, தமிழ்நாட்டரசுக்குப் பெருமைதான்! முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த முயற்சிகள் வீண்போகவில்லை எனத் தமிழர்கள் நெஞ்சு நிமிர்த்திக் கொள்ளலாம்.

நிதானத்தோடும் அறிவுச்சமநிலையோடும் சிந்தித்திருந்தால் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழ்நாட்டு முதல்வருக்கு இப்படியோர் அவசர பதிலை அள்ளி வீசியிருக்கமாட்டார். ஏற்கெனவே, கோவை அன்னபூர்ணா உணவக உரிமையாளரிடம் அவர் காட்டிய அவசர ஆணவப் பதிலை, தமிழ்நாடு மறக்கவில்லை. இப்போதும், பொருத்தம் இல்லாமல் சொற்களை வீசி, அவர் விரித்த வலையில் அவரே சிக்கிக்கொண்டு விழிக்கிறார்.

"அரிசி, கோதுமைக்குப் பதிலாக வேறு பயிர்களில் கவனம் செலுத்துங்கள் என்றுதானே சொன்னேன். பற்றாக்குறையாக உள்ள பருப்புவித்துக்களையும் எண்ணெய்வித்துக்களையும் பயிரிடத்தானே அறிவுறுத்தினேன்" இப்படி மழுப்புகிறார் அவர்.

திருவள்ளுவருக்குக் காவி பூசுவதில் காட்டிய ஆர்வத்தை திருவள்ளுவரைப் படிப்பதிலும் பரப்புவதிலும் பா.ஜ.க.வினர் இனிமேலாவது காட்ட வேண்டும். 'இடனறிதல், காலமறிதல்' என வள்ளுவர் கூறிய சிலவற்றையாவது நிர்மலா சீதாராமன் போன்றவர்களைப் படிக்கச் சொல்ல வேண்டும். நெல் விளையும் பூமியில், 'துவரை போடு, கடலை போடு, உளுந்து போடு, பயறு போடு, கடுகு போடு, பனை நடு' என 'நிர்மலாக்கள்' பேசுவது, இந்த மண்ணின் இயல்பையும் மக்களின் அனுபவ அறிவையும் அறியாமல் பேசும் ஆணவப்பேச்சு!' என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்





பல்லாபுரம் பாலா

### தலைவர் அளித்த ஊக்கமும் உற்சாகமும்!

2017-ஆம் ஆண்டு, திருச்சி மத்திய மாவட்டம், இலால்குடி ஒன்றியத் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமனம் பெற்றபோது, அன்றைய செயல் தலைவர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவர் அளித்த ஊக்கமும் வாழ்த்தும் இன்னும் பல பத்தாண்டுகளுக்கு, உற்சாகத்துடன் இயங்கவைக்கும் ஆற்றல் கொண்டவை.

**- பல்லாபுரம் பாலா,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**தகவல் தொழில்நுட்ப அணி,**
**திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள் — கருவூலம்

### மக்கள் பிறப்பிக்கும் ஆணை!

1967-ஆம் ஆண்டு கழகத்தின் தேர்தல் அறிக்கையில், பேரறிஞர் அண்ணா வைத்த வேண்டுகோள். 'மக்களின் குரலே மகேசன் குரல்' என்ற பேருண்மையை, தி.மு.கழகம் உணர்ந்திருக்கிறது. நல்லாதரவு கொடுத்து, மக்களை மதித்து, அவர்களின் நல்வாழ்வுக்காகச் செயல்படும் ஒரு நல்லாட்சி அமைத்திட, கழகத்துக்கு வாய்ப்பு அளிக்கும்படி பொதுமக்களிடம் தி.மு.கழகம் முறையிட்டுக்கொள்கிறது. மக்கள் பிறப்பிக்கும் ஆணையின் வழிநின்று, தொடர்ந்து பணியாற்றிட, கழகம் உறுதி தெரிவிக்கிறது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900